செய்தி வெளியீடு எண். 205 நாள். 16.04.2018

**மாண்புமிகு முதலமைச்சர் மாநில இளைஞர் விருது-2018-க்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110-ன்கீழ் "சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றும் இளைஞர்களது பணியை அங்கீகரிக்கும் பொருட்டு, முதலமைச்சர் மாநில இளைஞர் விருது" என்ற புதிய விருது உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள். 15 முதல் 35 வயது வரையுள்ள 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு ஒவ்வோராண்டும் சுதந்திர தினத்தன்று இவ்விருது வழங்கப்படும் என்றும், இந்த முதலமைச்சர் மாநில இளைஞர் விருது, ரூ.50,000/- ரொக்கம், பாராட்டுப் பத்திரம் மற்றும் பதக்கத்தை உள்ளடக்கியதாகும்

அதன்படி, 2018-ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருது 2018-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ந்தேதி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சுதந்திர தினத்தன்று வழங்கப்பட உள்ளது.

இதுசம்பந்தமாக 15 முதல் 35 வயதிற்குட்பட்ட தகுதி வாய்ந்த ஆண் / பெண். ஆகியோர் விண்ணப்பிக்கலாம். கடந்த ஏப்ரல் 1 2017 அன்று 15 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும் மற்றும் மார்ச் 31, 2018 அன்று 35 வயதுக்குள்ளாக இருத்தல் வேண்டும். கடந்த நிதியாண்டில் (2017-2018) மேற்கொள்ளப்பட்ட சேவைகள் மட்டுமே பரிசீலிக்கப்படும். விருதிற்கு விண்ணப்பிக்கும் முன்பு குறைந்தபட்சம் 5 வருடங்கள் தமிழகத்தில் குடியிருந்தவராக இருத்தல் வேண்டும் (சான்று இணைக்கப்பட வேண்டும்) விண்ணப்பதாரர்கள் சமுதாய நலனுக்காக தன்னார்வத்துடன் தொண்டாற்றியிருக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்த தொண்டு, கண்டறியப்படக் கூடியதாகவும், அளவிடக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். மத்திய / மாநில அரசுகள், பொதுத் துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் / கல்லூரிகள் / பள்ளிகளில் பணியாற்றுபவர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பிக்க இயலாது. விண்ணப்பதாரருக்கு உள்ளூர் மக்களிடம் உள்ள செல்வாக்க விருதிற்கான பரிசீலனையில் கணக்கிற் கொள்ளப்படும். விண்ணப்பப் படிவம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணைய தளத்தின் முகவரி www.sdat.tn.gov.in லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் திருவள்ளூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் 30.04.2018 மாலை 5.00 மணி ஆகும். பெறப்பட்ட விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு, தகுதியான விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்படும்.

மேலும் விவரங்களுக்கு திருவள்ளூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களை அலுவலக நேரங்களில் 044-27666249 அல்லது 7401703482 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**